**தேசிய விளையாட்டு நிதியம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தேசிய விளையாட்டு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 260,000 கூட்டுத் தொகையான 26 பாதுகாப்பு பிணை வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பாதுகாப்பு பிணை வைப்பு பணத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 877(1)(ஈ) பந்தி | 2021 ஆம் ஆண்டில் தேசிய விளையாட்டு நிதிய பாதீட்டிற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | நிதியத்தின் பாதீட்டிற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (iii) | நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) பந்தி | மீளாய்வாண்டிற்காக தேசிய விளையாட்டு நிதியத்தின் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறிப்பிடுவதுடன், 2022 | செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்படல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இற்குரிய புதிய பாதீட்டின் பிரகாரம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்ட பாதீட்டு அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக்கோவையின் ix ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது தேசிய விளையாட்டு நிதியத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்காக விளையாட்டு அமைச்சில் இருந்து 08 உத்தியோகத்தர்களுக்கும், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தில் 03 விளையாட்டு பயிற்சியாளர்களுக்கும் செலுத்தப்பட்ட ரூபா 1.9 மில்லியன் ஆன படிகளுக்காக அமைச்சரின் அங்கீகாரம் மாத்திரம் பெறப்பட்டிருந்தது. | விளையாட்டு நிதியத்திற்குரிய கொடுப்பனவுகள் முழுமையாக அமைச்சரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற விடயமாக இருந்ததுடன், சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் அந்த அதிகாரத்தை அமுல்படுத்துவதற்கு தாபன பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளல் தேவையற்றதாகும். தாபன பணிப்பாளர் அதிபரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்ததா என்பது தொடர்பாக சட்டமா அதிபரிடம் விசாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரச உத்தியோகத்தர்களுக்கு படி செலுத்தும் போது தாபன பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 12,466,552 மிகையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 79,788,742 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 92,255,294 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு நிதியத்தின் வருமானம் ரூபா 164,720,372 அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட பற்றாக்குறை முறையே ரூபா 26,110,111 மற்றும் ரூபா 6,495,405 ஆக இருந்ததுடன், 2020 ஆம் ஆண்டு வரையில் ரூபா 49,928,743 தொகையான வருமானம் இதைப் போல் மூன்று மடங்குக்கு அண்ணளவாக ரூபா 127,717,485 செலவினம் காணப்பட்டதன் காரணமாக ரூபா 77,788,742 நிதி பற்றாக்குறையொன்று காணப்பட்டது. இந்த மூன்று வருடங்களின் நிதி செயலாற்றலின் பின்னடைவு காண்பிக்கப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 212,649,115 மற்றும் செலவினம் ரூபா 200,182,563 ஆனமையால் ரூபா 12 மில்லியனுக்கு அதிகமான நிதி மிகையொன்றை பெறக்கூடியதாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வருடாந்தம் விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல் மற்றும் விளையாட்டு இயலுமையை கட்டியெழுப்பும் நோக்காகக் கொண்டு நிதியத்தின் பணிகள் நிறைவேற்றப்படுகின்றது என காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 200.1 மில்லியன் மொத்த செலவினத்தில் 02 சதவீதமான ரூபா 4 மில்லியன் மாத்திரம் விளையாட்டு வீர, வீராங்கனைகளின் ஊட்டச்சத்து நிலையை கட்டியெழுப்புவதற்காக செலவிடப்பட்டிருந்தது. | விளையாட்டு நிதியம் ஈடுபடுத்தப்பட வேண்டிய பணிகளுக்கு இடையே விளையாட்டு வீர வீராங்கனைகளின் ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல் பிரதான பணியாக விஷேடமாக உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | விளையாட்டு வீரர்களின் செயலாற்றலை மேம்படுத்துவதற்காக ஊட்டச்சத்து நிலையை உயர்த்துதல் தொடர்பாக போதியளவான கவனம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கையில் விளையாட்டு திறனை அதிகரிக்கும் நோக்காகக் கொண்டு சர்வதேச திறமையை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள உயர் திறமையுடனான 60 விளையாட்டு வீர வீராங்கனைகளுக்காக மாதாந்தம் ரூபா 25,000 ஊட்டச்சத்து பொதியொன்றை கையளிப்பதற்கு உரிய அனுசரணையினை வழங்குவதற்கு தனியார் | பதில் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டு அனுசரணை நிதியத்தை குறித்துரைத்த பணிகளுக்காக பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனம் ஒன்று விருப்பம் தெரிவித்து ரூபா 9 மில்லியன் தொகையை தேசிய விளையாட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அனுசரணை நிறுவனத்திடம் இருந்து கிடைத்த ரூபா 9 மில்லியன் தொகையில் 54 விளையாட்டு வீரர்களுக்கு 03 மாத காலத்திற்காக ரூபா 4 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டு வெளிநாடு சென்று விளையாட்டு பயிற்சியினைப் பெறும் இரண்டு வீரர்களுக்காக ஊக்குவிப்பு படியாக ரூபா 4.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2020 டோக்கியோ பெராலிம்பிக் போட்டியின் போது தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வெற்றியீட்டு இரண்டு விளையாட்டு வீரர்களுக்கும், அவர்களின் பயிற்சியாளர்களுக்கும் தேசிய விளையாட்டு சபையின் பரிந்துரையின் படி பண பரிசு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்பரையில் பொது திறைசேரியில் இருந்து ரூபா 96 மில்லியன் வழங்கப்பட்டு ரூபா 91.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும், அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்படாத விஷேட திறமைகளை காண்பித்த இன்னும் 05 விளையாட்டு வீரர்களுக்கும், அவர்களின் பயிற்சியாளர்களுக்கும் ரூபா 8.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | சர்வதேச போட்டிகளின் போது வெற்றியினை வழங்கிய விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு நலன்களை வழங்கும் விளையாட்டு சபையின் வழிகாட்டியின் அடிப்படையில் விளையாட்டு நிதியத்தின் மூலம் கௌரவ அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. விளையாட்டு சட்டத்தின் ஏற்பாடுகளின் படி அமைச்சருக்கு சொந்தமான அதிகாரங்களின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | தங்கம், வெள்ளி மற்றும் விஷேட திறன்களை காண்பித்த சகல விளையாட்டு வீரர்களுக்காகவும் பரிசிகளை கையளிப்பதாயின் அதற்காக முறையான பிரகாரம் அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ஈ) | தற்போது காணப்படுகின்ற விளையாட்டு பாடசாலைகளின் பௌதீக வளங்களை வழங்குதல் தொடர்பாக முன்மொழிவின் பிரகாரம் அத்தியவசிய | உரிய தகவல்களை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சுக்கு மீள் நினைவூட்டலும் அனுப்பப்பட்ட போதும் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இது | ஏனைய அரச நிறுவனத்திற்கு நிதி ஏற்பாடுகளை வழங்கும் போது அந்த செயலாற்றல் தொடர்பாக |

| | | | |
|---|---|---|---|
| | விளையாட்டு பொருட்களில் அடிப்படை உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும், போக்குவரத்து செய்வதற்கும் விளையாட்டு நிதியத்தின் மூலம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு 2020 ஆம் ஆண்டில் ரூபா 5 மில்லியன் வழங்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 4.6 மில்லியன் மாத்திரம் விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தது. | தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும். | பின்தொடர் நடவடிக்கைககள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | பொதுநலவாய விளையாட்டு போட்டி மற்றும் ஆசிய விளையாட்டுப் போட்டியை இலக்காகக் கொண்டு உயர்ந்த செயற்திறன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்களின் இயலுமையை அதிகரிப்பதற்குரிய போட்டிகளில் வெற்றியடையும் எதிர்பார்ப்பில் 06 விளையாட்டுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட விளையாட்டு வீர வீராங்கனைகள் மற்றும் பயிற்சியளிப்பவர்களுக்காக தேசிய விளையாட்டு நிதியத்தின் மூலம் 2021 மார்ச் முதல் திசெம்பர் வரை ரூபா 75.2 மில்லியன் படியாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் அந்த கொடுப்பனவுகளுக்காக விளையாட்டு வீரர்களை தெரிவு செய்யும் போது பின்பற்றப்பட்ட திட்ட முறைமை மற்றும் அதற்குரிய கருதுகோள்கள் தீர்மானிக்காமல் செலுத்தப்பட்டிருந்தது. | தேசிய விளையாட்டு சபையினதும், விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினதும் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நிதிஏற்பாடு தேசிய விளையாட்டு நிதியத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், உரிய நிறுவனம் தொடர்பில் இது தொடர்பாக எதிர்காலத்தில் விரிவான அறிக்கையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சர்வதேச விளையாட்டு போட்டிகளை இலக்காகக் கொண்டு விளையாட்டு வீரர்களின் செயலாற்றலை மேம்படுத்தல் தொடர்பான வசதிகளை வழங்கும் போது முறையான திட்ட முறைமையொன்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | தேசிய ஒலிம்பிக் குழுவினால் 2021 ஆம் ஆண்டில் ஆறு மாத முழுமையான புலமைப்பரிசிலின் அடிப்படையில் பயிற்சி | தேசிய விளையாட்டு சபையின் பரிந்துரை மற்றும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பரிந்துரையின் அடிப்படையில் உரிய நிதிஏற்பாடு தேசிய | விரிவான பயிற்சியொன்றை பெறுகின்ற விளையாட்டு வீரர்கள் சர்வதேச போட்டிகளுக்கு |

| | | |
|---|---|---|
| நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டுக்கு அனுப்பப்பட்ட விளையாட்டு வீரர் ஒருவருக்கு உயர்ந்த செயலாற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 10 மாத காலத்திற்காக ரூபா 1 மில்லியன் படியும், ரூபா 75,000 ஆன ஊட்டச்சத்து படியும் செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக வெளிநாட்டு பயிற்சிகளை பெறுகின்ற இன்னுமொரு விளையாட்டு வீரருக்கு 03 மாதங்களுக்காக ரூபா 300,000 தொகையும், மிகுதி 07 மாதங்களுக்காக அ.டொலர் 1,500 வீதம் ரூபா 2 மில்லியன் தொகையும் தேசிய விளையாட்டு நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்ட போதும் அந்த இரண்டு விளையாட்டு வீரர்களும் தனிப்பட்ட காரணத்தை காண்பித்து 2022 இன் பொதுநலவாய விளையாட்டு போட்டிகளில் பிரதிநிதித்துவப்படுத்தி இருக்கவில்லை. | விளையாட்டு நிதியத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், உரிய நிறுவனம் தொடர்பில் இது தொடர்பாக எதிர்காலத்தில் விரிவான அறிக்கையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பங்குபற்றுவதற்கு முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1973 இன் 25 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சட்டத்தின் 22 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கையின் விளையாட்டுகளுக்கு தைரியம் ஊட்டுதல், அதனை விருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக தேசிய விளையாட்டு நிதியம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது, எனினும் இது வரை இலங்கை பங்குபற்றிய 19 ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளின் போது 02 வெள்ளிப் பதக்கங்கள் மாத்திரம் வெல்லப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டில் பொதுநலவாய விளையாட்டு போட்டிகளின் போது பெறப்பட்ட 05 வெண்கலப் பதக்கங்கள் 2022 ஆம் ஆண்டு வரையில் 03 வெண்கலப் பதக்கங்கள் வரையில் வீழ்ச்சியடைந்திருந்தது. | ஏற்றுக் கொள்கின்றோம். | விளையாட்டு நிதியத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | உயர் செயலாற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் படிகளைப் பெற்ற 35 விளையாட்டு வீரர்கள் பொதுநலவாய விளையாட்டு போட்டிகளுக்காக தெரிவு செய்யப்படாதிருந்ததுடன், விளையாட்டு போட்டிகளுக்காக அங்கீகாரம் உரித்தான 14 விளையாட்டு வீரர்களுக்கு படி வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய விளையாட்டு சபையினதும், தேசிய விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினதும் பரிந்துரையின் அடிப்படையில் நிதிஏற்பாடு தேசிய விளையாட்டு நிதியத்தில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்ததுடன் , உரிய நிறுவனம் தொடர்பில் இது தொடர்பாக விரிவான அறிக்கையொன்று எதிர்காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உயர்ந்த திறமையினை காண்பிக்கின்ற விளையாட்டு வீரர்களுக்கு படிகளை வழங்குதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கையில் விளையாட்டு வீர வீராங்கனைகள் உள்நாட்டு ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் பெற்ற திறன்களை தரமிடல் மற்றும் வெற்றியீட்டல் தொடர்பான தரவு முறைமையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நாளது வரையாக்கப்படுகின்றது. | விளையாட்டு தகவல்களை உள்ளடக்கிய இணையதளமொன்றை நாளதுவரையாக்க வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாத்தறை கும்புறுப்பிட்டி பொக்ஸிங் விளையாட்டு அரங்கிக்காக கட்டிடமொன்றை அமைத்தல் மற்றும் கரப்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்வதற்காக 2020 ஆம் ஆண்டின் போது தேசிய விளையாட்டு நிதியத்தின் மூலம் மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு ரூபா 9.1 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், மொத்த செலவினம் ரூபா 7.3 மில்லியன் ஆனமையால் மிகுதி தொகையான ரூபா 1.9 மில்லியனை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் செயற்திட்டத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பான அறிக்கை நிதியத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பணிகள் நிறைவேற்றாதிருக்குமாயின் மிகுதி பணத்தை இளைஞர் அலுவல்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சுக்கு பெற்றுக்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | ஏனைய அரச நிறுவனங்களின் மூலம் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வழங்கப்படுகின்ற நிதிஏற்பாடு தொடர்பாக முறையான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |